உ
சிவமயம்



தெட்ஷண கைலாயமான திருக்கோணமலையை பிறப்பிடமாகக் கொண்ட உயர்சைவ வேளான் குலோத்துங்க முதலியார் மரபில் வந்த பெருந்தலைவர்

# அமரர்
# இராஜவரோதயம் சம்பந்தன் ஐயா

அவர்களின் சிவப்பேறு குறித்த

# 31ம் நாள்
# நினைவுப்பதிவு
# 30.07.2024

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அம்பாள் துணை



# அருள்மிகு ஸ்ரீ பத்திரகாளி அம்மன்
# திருக்கோணமலை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமர்ப்பணம்..

எல்லோரும் சமவுரிமை பெற்று
வாழ வேண்டும் என்பதற்காக தன்
வாழ்நாளில் பெரும் பகுதியை
அர்ப்பணித்த அந்த புனித
ஆத்மாவுக்கு
இம்மலர் சமர்ப்பணம்

**குடும்பத்தினர்**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"செய்நன்றி மறந்தார்க்கு உய்வில்லை"



# அமரர் இராஜவரோதயம் சம்பந்தன் ஐயா

மண்ணுலகில்
05.02.1933



விண்ணுலகில்
30.06.2024

## திதி வெண்பா

தலைவனுக்கு ஏற்ற தகைமை சம்பந்தன்
இல்லையென இயம்பார் - வல்லான்
சட்ட அரசியலிலே சென்றான் அம்பலனடி
குரோதி ஆனியபரதசமியிலே கண்டாரே

சுபம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குகமயம்

# வில்லூன்றிக் கந்தசுவாமி தேவஸ்தானம்

சிவாச்சார்யமணி
சிவஸ்ரீ சு.சுதாகரக்குருக்கள்
பிரதம சிவாச்சாரியார், நிருவாகஸ்தர்
வில்லூன்றிக் கந்தசுவாமி தேவஸ்தானம்
திருகோணமலை, இலங்கை
026-2224856
026-2221685



Sivachcharyamanv
Siva sri S.Suthakarakkurukkal
Prathama Sivachcharlyar Aathinakartha
Villunrykanthasuwamy Dhevasthanam
Trincomalee, Sri Lanka

Date :   /   /

எமது மனதை விட்டு அகலாத மாமனிதர்

அமரர். திரு. இராஜவரோதயம் சம்பந்தன் ஐயா அவர்கள்

திரு. இராஜவரோதயம் சம்பந்தன் ஐயா அவர்களின் திடீர் மறைவு எமக்கு மிகவும் வேதனையைத் தந்தது. ஐயா! மேலும் வில்லூன்றிக் கந்தன் மேல் அளவற்ற பக்தி கொண்டவர். வில்லூன்றிக் கந்தசுவாமியாரின் மூன்று மகா கும்பாபிஷேகங்களில் தலைமை தாங்கி நடாத்திய பெருமை அவருக்கு உண்டு. ஆலய பாரம்பரிய சிவாச்சாரியார்களுடன் மிகவும் பாசமாகவும், அன்பாகவும் பழகிய மாமனிதர். தேர்த்-திருப்பணிச் சபைத் தலைவராகவும் இருந்து உள்ளார். அன்னாரின் அடக்கம் ஆடம்பரமில்லா வாழ்க்கை நிறைவைக் கொடுத்துள்ளது.

அன்னாரின் பிரிவால் துயருற்று இருக்கும் மனைவி பிள்ளைகள், பேரப்பிள்ளைகள், குடும்பத்தினருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவித்துக் கொள்வதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல திருவருள் மிகு வில்லூன்றிக் கந்தப் பெருமானை பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி சாந்தி

ஓம் சரவணபவ

இவ்வண்ணம்
சிவஸ்ரீ .சு. சுதாகரகுருக்கள்
சிவஸ்ரீ. சு. சிவகரகுருக்கள்
(வில்லூன்றிக் கந்தசுவாமி
தேவஸ்தானம் பிரதமகுரு ஆதீன கர்த்தா)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"வேதாகமமாமணி"
சிவஸ்ரீ சோ. இரவிச்சந்திரக் குருக்கள்
சமாதான நீதவான்
ஸ்ரீ பத்திரகாளி அம்பாள் தேவஸ்தானம்
(பிரதமகுருவும் ஆதீனகர்த்தாவும்)
திருக்கோணமலை

தொ.பே. 026 - 2222760
026 - 2224680

websit: www.trincopathirakali.com

உ

"VERHAKAMAMAMANI"
Siva sri.S.Ravichchandira kurukkal
JUSTICE OF THE PEACE (J.P)
SRI PATHIRAKALIAMBAL THEVASTHANAM
(Chief Incumbent & Chief Priest)
Trincomalee

........../ .........../ 20..........

கௌரவ இராஜவரோதயம் சம்பந்தனின் மறைவையொட்டி
திருக்கோணமலை ஸ்ரீ பத்திரகாளி அம்பாள் ஆலய பிரதம
குரு பிரம்மஸ்ரீ சோ.இரவிச்சந்திரக்குருக்களின் இரங்கல் மடல்

வையத்துள் வாழ்வாங்கு வாழ்வார் வானுறையும் தெய்வத்துள்ளாவார் என்பது மறை. திருக்கோணமலையிலுள்ள மரபு மேன்மை கொண்டகுடியில் பிறந்து ஒரு சட்டவல்லுநராக தன்னை அறிமுகமாக்கி காலமும் மக்களும் அழைத்ததன் பேரில் திருக்கோணலை மாவட்டத்தின் பாராளுமன்ற உறுப்பினராக 7 தடவைகள் தேர்ந்தெடுக்கப்பட்டு 32 ஆண்டுகள் ஓய்வு உறக்கமின்றி மக்கள் சேவையே மகேசன் சேவையென பணிபுரிந்த சம்பந்தன் எனும் காலவிருட்சத்தின் மறைவு ஒட்டுமொத்த தமிழ் இனத்தையுமே துயருறவைத்துள்ளது. பிரபஞ்சம் முழுவதும் தோற்றமும். மறைவும் இடம் பெற்று வந்தாலும் பூவுலகத்தில் புகழுடன் வாழ்ந்த ஒருவருடைய மறைவு காலத்தையே கலங்கவைக்கும். அந்தவகையில் சம்பந்தன் ஐயாவின் மரணம் எம்மை கதிகலங்க வைத்துள்ளது.

கோயிலும் சுனையும் கடலுடன் சூழ்ந்த திருகோணமலை குடிகளுக்கு அவர் ஆற்றியபணி அளப்பரியது. அளந்து கொள்ள முடியா ஆழி போன்றது. புார்க்கும் இடமெல்லாம் நீக்கமற வியாபத்திருக்கும் அம்பாள் மீது அவர் கொண்ட பக்தி இறை மீது அவர் காட்டிய பக்தியின் காரணமாகவே மேன்மைகொள் சைவ நீதி தழைத்தோங்க வேண்டுமென்பதற்காக மாவட்டத்திலுள்ள ஆலயம் அனைத்துக்கும் அள்ளி அள்ளி கொடுத்த ஒரு கொடை

மேன்மையாளன் சம்பந்தன் ஐயா. அன்னாரின் மரணம் தேசமெல்லாம் வாழும் தமிழர்கள் அனைவருக்கும் ஈடு கட்டமுடியாத இழப்பு. இணை சொல்ல முடியாத இடை வெளியை உண்டாக்கியு ள்ளது என்பதை காலம் எமக்கு தெரிவிக்கிறது. அவரது மறைவால் வாடும் அவர் மனைவி மக்கள் குடும்ப உறவினர்கள். உலகத்தார் அனைவருடனும் எமது துயரத்தை பகிர்ந்து கொள்கிறேன்.

இவ்வண்ணம்
வேதாகமமாமணி
சோ. இரவிச்சந்திரக்குருக்கள்
அருள்மிகு ஸ்ரீ பத்திரகாளி அம்பாள் தேவஸ்தானம்.
திருக்கோணமலை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

# பஞ்ச புராணம்



திருச்சிற்றம்பலம்

## விநாயகர் துதி

திருவாக்கும் செய்கருமங் கைகூட்டும் செஞ்சொல்
பெருவாக்கும் பீடும் பெருக்கும் - உருவாக்கும்
ஆதலால் வானோரும் ஆனை முகத்தானைக்
காதலாற் கூப்புவர் தம் கை

## தேவாரம்

### சம்பந்தர்

தாயினும் நல்ல தலைவரென் றடியார்
தம்மடி போற்றிசைப் பார்கள்
வாயினும் மனத்தும் மருவிநின் றகலா
மாண்பினர் காண் பல வேடர்
நோயிலும் பிணியும் தொழிலர்பால் நீக்கி
நுழைதரு நூலினர் ஞாலம்
கோயிலும் சுனையும் கடலுடன் சூழ்ந்த
கோணமா மலை அமர்ந்தாரே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருவாசகம்

புன்புலால் யாக்கை புரை புரை கனியப்
பொன்னெடுங் கோயிலாப் புகுந்தென்
என்பெலாம் உருக்கி எளிமையாய் ஆண்ட
ஈசனே மாசிலா மணியே
துன்பமே பிறப்பே இறப்பொடு மயக்காந்
தொடக்கெலாம் அறுத்த நற்சோதி
இன்பமே உன்னைச் சிக்கெனப் பிடித்தேன்
எங்கெழுந் தருளுவ தினியே

## திருவிசைப்பா

இடர்கெடுத் தென்னை ஆண்டுகொண்டென்னுள்
இருட்பிழம் பறவெறிந் தெழுந்த
சுடர்மணி விளக்கின் உள்ளொளி விளங்குந்
தூய நற் சோதியுட் சோ தீ
அடல்விடைப்பாகா அம்பலக் கூத்தா
அயனொடு மாலறி யாமைப்
படரொளி பரப்பிப் பரந்து நின்றாயைத்
தொண்டனேன் பணியுமா பணியே

## திருப்பல்லாண்டு

மண்ணுக தில்லை வளர்க நம் பக்தர்கள்
வஞ்சகர் போயகலப்
பொன்னின் செய் மண்டபத்துள்ளே புகுந்து
புவனி யெல்லாம் விளங்க
அன்னநடை மடவாள் உமைகோன்
அடியோமுக் கருள் புரிந்து
பின்னைப் பிறவி யறுக்க நெறிதந்த
பித்தற்குப் பல்லாண்டு கூறுதுமே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருப்புராணம்

ஊனடைந்த உடம்பின் பிறவியே
தானடைந்த உறுதியைச் சாருமால்
தேனடைந்த மலர்பொழில் தில்லையுள்
மாநடஞ்செய் வரதர் பொற் தாள்தொழ

## திருப்புகழ்

பிறவியலை யாற்றில் புகுதாதே
பிரகிருதி மார்க்கமுற் றலையாதே
உறுதி குரு வாக்கியப் பொருளாளே
உனது பத காட்சியைப் தருவாயே
அறுசமய சாத்திரப் பொருளானே
அறிவு ளறிவார்க் குணக் கடலோனே
குறுமுனிவ னேத்துமுத் தமிழோனே
குமரகுரு கார்த்திகைப் பெருமாளே

## வாழ்த்து

வான்முகில் வழாது பெய்க மலிவளஞ் சுரக்க மன்னன்
கோன்முறை யரசு செய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான் மறை யறங்க ளோங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மைகொள் சைவ நீதி விளங்குக வுலக மெல்லாம்.

திருச்சிற்றம்பலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாணிக்க வாசக சுவாமிகள் அருளிய



# சிவபுராணம்

**திருவாசகச் சிறப்பு**

தொல்லை யிரும்பிறவிச் சூழந் தளைநீக்கி
அல்லலறுத் தானந்த மாக்கியதே - எல்லை
மருவா நெறியளிக்கும் வாதவூர் எங்கோன்
திருவா சகம் என்னுந் தேன்.

**சிவபுராணம்**

நமச்சிவாய வாழ்க! நாதன் தாள் வாழ்க!
இமைப்பொழுது என்நெஞ்சில் நீங்காதான் தாள் வாழ்க!
கோகழியாண்ட குருமணிதன் தாள் வாழ்க!
ஆகம மாகிநின்று அண்ணிப்பான் தாள் வாழ்க!
ஏகன் அநேகன் இறைவன் அடி வாழ்க!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேகங் கெடுத்தாண்ட வேந்தனடி வெல்க!
பிறப்பறுக்கும் பிஞ்ஞகன்றன் பெய்கழல்கள் வெல்க!
புறத்தார்க்குச் சேயோன்றன் பூங்கழல்கள் வெல்க!
கரங்குவிவா ருண்மகிழுங் கோன் கழல்கள் வெல்க!
சிரங்குவிவா ரோங்குவிக்கும் சீரோன்கழல் வெல்க!

ஈசனடி போற்றி எந்தையடி போற்றி
தேசனடி போற்றி சிவன் சேவடிபோற்றி
நேயத்தே நின்ற நிமலனடி போற்றி
மாயப் பிறப்பறுக்கும் மன்ன னடிபோற்றி
சீரார் பெருந்துறைநந் தேவனடிப்போற்றி

ஆராத இன்பம் அருளு மலை போற்றி
சிவனவனென் சிந்தையுள் நின்ற அதனால்
அவனருளாலே அவன் தாள் வணங்கிச்
சிந்தை மகிழச் சிவபுராணந் தன்னை
முந்தை வினைமுழுதும் ஓய வுரைப்பன்யான்

கண்ணுதலான் தன் கருணைக் கண் காட்டவந்தெய்தி
எண்ணுதற் கெட்டா எழிலார் கழலிறைஞ்சி
விண்ணிறைந்து மண்ணிறைந்து மிக்காய் விளங்கொளியாய்
எண்ணிறந் தெல்லையிலாதானே நின்பெருஞ் சீர்
பொல்லா வினையேன் புகழுமா றொன்றறியேன்

புல்லாகிப் பூடாய்ப் புழுவாய் மரமாகிப்
பல்விருகமாகிப் பறவையாய் பாம்பாகி
கல்லாய் மனிதராய்ப் பேயாய்க் கணங்களாய்
வல்லரசு ராகி முனிவராயத் தேவராயச்
செல்லா நின்ற இத்தாவர சங்கமத்துள்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எல்லாப் பிறப்பும் பிறந்திளைத்தே னெம்பெருமான்
மெய்யேயுன் பொன்னடிகள் கண்டின்று வீடுற்றேன்
உய்ய என் உள்ளத்து ஓங்கார மாய் நின்ற
மெய்யா விமலா விடைப்பாகா வேதங்கள்
ஐயா வெனவோங்கி ஆழந்தகன்ற நுண்ணியனே!

வெய்யாய் தணியாய் இயமானனாம் விமலா
பொய்யா யினவெல்லாம் போயகல வந்தருளி
மெய்ஞ்ஞானமாகி மிளிர்கின்ற மெய்ச்சுடரே
எஞ்ஞானந் தன்னை அகல்விக்கும் நல்லறிவே

ஆக்கம் அளவிறுதி இல்லாய் அனைத்துலகும்
ஆக்குவாய் காப்பா யழிப்பாய் யருள்தருவாய்
போக்குவா யென்னைப் புகுவிப்பாய் நின்றொழும்பில்
நாற்றத்தி னேரியாய் சேயாய் நணியானே
மாற்ற மனங்கழிய நின்ற மறையோனே
கறந்தபால் கன்னலொடு நெய்கலந்தாற் போலச்
சிறந்தடியார் சிந்தனையுள் தேனூறி நின்று
பிறந்த பிறப்பறுக்கும் எங்கள் பெருமான்
நிறங்களோ ரைந்துடையாய் விண்ணொர்களேத்த
மறைந்திருந்தாயெம்பெருமான் வல்வினையேன் தன்னை

மறைந்திட மூடிய மாய இருளை
அறம் பாவ மென்னும் அருங்கயிற்றாற் கட்டிப்
புந்தோல் போர்த் தெங்கும் புழுவழுக்கு மூடி
மலஞ் சோரும் மொன்பதும் வாயிற் குடிலை
மலங்கப் புலனைந்தும் வஞ்சனையச் செய்ய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விலங்கு மனத்தால் விமலா உனக்கு
கலந்தவன் பாகிக் கசிந்துள் ளுருகும்
நல்ந்தா னிலாத சிறியேற்கு நல்கி
நிலந்தன்மேல் வந்தருளி நீள்கழல்கள் காட்டி
நாயிற் கடையாய்க் கிடந்த அடியேற்குத்

தாயிற் சிறந்த தாயாவான தத்துவனே
மாசற்ற சோதி மலர்ந்த மலர்ச்சுடரே
தேசனே தேனா ரமுதே சிவபுரனே
பாசமாம் பற்றறுத்துப் பாரிக்கும் ஆரியனே
நேச அருள் புரிந்து நெஞ்சில் வஞ் சங் கெடப்

பேராது நின்ற பெருங் கருணைப் பேராறே
ஆரா வமுதே அளவிலாப் பெம்மானே
ஓராதா ருள்ளத் தொளிக்கும் ஒளியானே
நீரா யுருக்கியென் னாருயிராய் நின்றானே
இன்பமும் துன்பமு மில்லானே யுள்ளானே

அன்பருக் கன்பனே யாவையுமாய் அல்லையுமாஞ்
சோதியனே துன்னிருளே தோன்றாப் பெருமையனே
ஆதியனே யந்தம் நடுவாகி அல்லானே
ஈர்த்தென்னை யாட்கொண்ட எந்தை பெருமானே
கூர்ந்த மெய்ஞ் ஞானத்தாற் கொண்டுணர்வார் தங்கருத்தின்

நோக்கரிய நோக்கே நுணுக்கரிய நுண்ணுணர்வே
போக்கும் வரவும் புணர்வுமில்லாப் புண்ணியனே
காக்குமெங் காவலனே காண்பரிய பேரொளியே
ஆற்றின்ப வெள்ளமே அத்தா மிக்காய்நின்ற
தோற்றச் சுடரொளியாய்ச் சொல்லாத நுண்ணுணர்வாய்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாற்றமாம் வையகத்தின் வெவ்வேறே வந்தறிவோம்
தேற்றனே தேற்றத் தெளிவேயென் சிந்தனையுள்
ஊற்றான உண்ணாரமுதே உடையானே
வேற்றுவிகார விடக்குடம்பி னுட்கிடப்ப
ஆற்றேனெம் மையா அரனேயோ என்றென்று

போற்றிப் புகழ்ந்திருந்து பொய் கேட்டு மெய்யானார்
மீட்டிங்கு வந்து வினைப்பிறவி சாராமே
கள்ளப் புலக்குரம்பைக் கட்டழிக்க வல்லானே
நள்ளிருளில் நட்டம் பயின்றாடும் நாதனே
தில்லையுட் கூத்தனே தென்பாண்டி நாட்டானே

அல்லற் பிறவி அறுப்பானே ஓ! வென்று
சொல்லற் கரியானைச் சொல்லித் திருவடிக்கீழ்ச்
' சொல்லிய பாட்டின் பொருளுணர்ந்து சொல்லுவார்
செல்வர் சிவபுரத்தி னுள்ளார் சிவனடிக்கீழ்
பல்லோரும் ஏத்தப் பணிந்து

**திருச்சிற்றம்பலம்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓம் சரவணபவ



# கந்த சஷ்டி கவசம்

துதிப்போர்க்கு வல்வினைபோம்,
துன்பம்போம் நெஞ்சிற்
பதிப்போர்க்குச் செல்வம்
பலித்துக் கதித்தோங்கும்
நிஷ்டையுங் கைகூடும் - நிமலரருள்
கந்தர் சஷ்டி கவசந்தனை

**குறள் வெண்பா**

அமரரிடர் தீர அமரம் புரிந்த
குமரன் அடிநெஞ்சே குறி.

சஷ்டியை நோக்கச் சரவண பவனார்
சிஷ்டருக் குதவும் செங்கதிர் வேலோன்
பாதம் இரண்டில் பன்மணிச் சதங்கை
கீதம் பாடக் கிண்கிணி யாட
சஷ்டியை நோக்கச் சரவண பவனார்
சிஷ்டருக் குதவும் செங்கதிர் வேலோன்
பாதம் இரண்டில் பன்மணிச் சதங்கை
கீதம் பாடக் கிண்கிணி யாட
மையல் நடஞ்செயும் மயில்வாக னனார்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கையில் வேலால் எனைக் காக்கவென்றுவந்து
வரவர வேலா யுதனார் வருக
வருக வருக மயிலோன் வருக
இந்திரன் முதலா எண்டிசை போற்ற
மந்திர வடிவேல் வருக வருக
வாசவன் மருகா வருக வருக
நேசக் குறமகள் நினைவோன் வருக
ஆறுமுகம் படைத்த ஐயா வருக
நீறிடும் வேலவன் நித்தம் வருக
சிரகிரி வேலவன் சீக்கிரம் வருக
சரவண பவனார் சடுதியில் வருக
ரவண பவச ரரரர ரரர
ரிவண பவச ரிரிரிரி ரிரிரி
விணபவ சரவண வீரா நமோநம
நிபவ சரவண நிறநிறநிறென
வசர வணப வருக வருக
அசுரர் குடிகெடுத்த ஐயா வருக
என்னை ஆளும் இளையோன் கையில்
பன்னிரண்டாயுதம் பாச அங்குசமும்
பரந்த விழிகள் பன்னிரண் டிலங்க
விரைந்தெனைக் காக்க வேலோன் வருக
ஐயும் கிலியும் அடைவுடன் சௌவும்
உய்யொளி சௌவும் உயிரையுங் கிலியும்
கிலியுஞ் சௌவும் கிளரொளி யையும்
நிலைபெற் றென்முன் நித்தமும் ஒளிரும்
சண்முகன் நீயும் தனியோளி யொவ்வும்
குண்டலி யாம்சிவ குகன்தினம் வருக
ஆறு முகமும் அணிமுடி ஆறும்
நீறிடு நெற்றியும் நீண்ட புருவமும்
பன்னிரு கண்ணும் பவளச்செவ் வாயும்
நன்னெறி நெற்றியில் நவமணிச் சுட்டியும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈராறு செவியில் இலகுகுண் டலமும்
ஆறிரு திண்புயத் தழகிய மார்பில்
பல்பூ ஷணமும் பதக்கமும் தரித்து
நன்மணி பூண்ட நவரத்தின மாலையும்
முப்புரி நூலும் முத்தணி மார்பும்
செப்பழ குடைய திருவயிறு உந்தியும்
துவண்ட மருங்கில் சுடரொளிப் பட்டும்
நவரத்னம் பதித்த நற்சீ ராவும்
இருதொடை அழகும் இணைமுழந் தாளும்
திருவடி யதனில் சிலம்பொலி முழங்க
செககண செககண செககண செகண
மொகமொக மொகமொக மொகமொக மொகென
நகநக நகநக நகநக நகண
டிகுகுண டிகுடிகு டிகுகுண டிகுண
ரரரர ரரரர ரரரர ரரர
ரிரிரிரி ரிரிரிரி ரிரிரிரி ரிரிரி
டுடுடு டுடுடு டுடுடு டுடு
டகுடகு டிகுடிகு டங்கு டிங்குகு
விந்து விந்து மயிலோன் விந்து
முந்து முந்து முருகவேல் முந்து
என்தனை யாளும் ஏரகச் செல்வ
மைந்தன் வேண்டும் வரமகிழ்ந் துதவும்
லாலா லாலா லாலா வேசமும்
லீலா லீலா லீலா விநோதனென்று
உன்திரு வடியை உறுதியென் றெண்ணும்
என்தலை வைத்துன் இணையடி காக்க
என்னுயிர்க் குயிராம் இறைவன் காக்க
பன்னிரு விழியால் பாலனை காக்க
அடியேன் வதனம் அழகுவேல் காக்க
பொடிபுனை நெற்றியைப் புனிதவேல் காக்க
கதிர்வேல் இரண்டும் கண்ணினைக் காக்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விழிசெவி யிரண்டும் வேலவர் காக்க
நாசிக ளிரண்டும் நல்வேல் காக்க
பேசிய வாய்தனைப் பெருவேல் காக்க
முப்பத் திருபல் முனைவேல் காக்க
செப்பிய நாவை செவ்வேல் காக்க
கன்ன மிரண்டும் கதிர்வேல் காக்க
என்னிளங் கழுத்தை இனியவேல் காக்க
மார்பை இரத்ன வடிவேல் காக்க
சேரிள முலைமார் திருவேல் காக்க
வடிவே லிருதோள் வளம்பெறக் காக்க
பிடரிக ளிரண்டும் பெருவேல் காக்க
அழகுடன் முதுகை அருள்வேல் காக்க
பழுபதி னாறும் பருவேல் காக்க
வெற்றிவேல் வயிற்றை விளங்கவே காக்க
சிற்றிடை அழகுறச் செவ்வேல் காக்க
நாணாங் கயிற்றை நல்வேல் காக்க
ஆண்குறி யிரண்டும் அயில்வேல் காக்க
பிட்ட மிரண்டும் பெருவேல் காக்க
வட்டக் குதத்தை வடிவேல் காக்க
பணைத்தொடை யிரண்டும் பருவேல் காக்க
கணைக்கால் முழந்தாள் கதிர்வேல் காக்க
ஐவிரல் அடியினை அருள்வேல் காக்க
கைக ளிரண்டும் கருணைவேல் காக்க
முன்கை யிரண்டும் முரண்வேல் காக்க
பின்கை யிரண்டும் பின்னவள் இருக்க
நாவில் சரஸ்வதி நற்றுணை யாக
நாபிக் கமலம் நல்வேல் காக்க
முப்பால் நாடியை முனைவேல் காக்க
எப்பொழுதும் எனை எதிர்வேல் காக்க
அடியேன் வதனம் அசைவுள நேரம்
கடுகவே வந்து கனகவேல் காக்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வரும்பகல் தன்னில் வச்சிரவேல் காக்க
அரையிருள் தன்னில் அனையவேல் காக்க
ஏமத்தில் சாமத்தில் எதிர்வேல் காக்க
தாமதம் நீக்கிச் சதுர்வேல் காக்க
காக்க காக்க கனகவேல் காக்க
நோக்க நோக்க நொடியில் நோக்க
தாக்க தாக்க தடையறத் தாக்க
பார்க்க பார்க்க பாவம் பொடிபட
பில்லி சூனியம் பெரும்பகை அகல
வல்ல பூதம் வலாட்டிகப் பேய்கள்
அல்லற் படுத்தும் அடங்கா முனியும்
பிள்ளைகள் தின்னும் புழக்கடை முனியும்
கொள்ளிவாய்ப் பேய்களும் குறளைப் பேய்களும்
பெண்களைத் தொடரும் பிரமராட்சதரும்
அடியனைக் கண்டால் அலறிக் கலங்கிட
இரிசிகாட் டேரி இத்துன்ப சேனையும்
எல்லிலும் இருட்டிலும் எதிர்ப்படும் அண்ணரும்
கனபூசை கொள்ளும் காளியோ டனைவரும்
விட்டாங் காரரும் மிகுபல பேய்களும்
தண்டியக் காரரும் சண்டாள ர்களும்
என்பெயர் சொல்லவும் இடிவிழுந் தோடிட
ஆனை அடியினில் அரும்பா வைகளும்
பூனை மயிரும் பிள்ளைகள் என்பும்
நகமும் மயிரும் நீண்முடி மண்டையும்
பாவைக ளுடனே பலகல சத்துடன்
மனையிற் புதைத்த வஞ்சனை தனையும்
ஒட்டிய செருக்கும் ஒட்டிய பாவையும்
காசும் பணமும் காவுடன் சோறும்
ஓதுமஞ் சனமும் ஒருவழிப் போக்கும்
அடியனைக் கண்டால் அலைந்து குலைந்திட
மாற்றார் வஞ்சகர் வந்து வணங்கிட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலதூ தாளெனைக் கண்டாற் கலங்கிட
அஞ்சி நடுங்கிட அரண்டு புரண்டிட
வாய்விட் டலறி மதிக்கெட் டோடப்
படியினில் முட்டப் பாசக் கயிற்றால்
கட்டுடன் அங்கம் கதறிடக் கட்டு
கட்டி உருட்டு கைகால் முறியக்
கட்டு கட்டு கதறிடக் கட்டு
முட்டு முட்டு விழிகள் பிதுங்கிட
செக்கு செக்கு செதில் செதி லாக
சொக்கு சொக்கு சூர்ப்பகைச் சொக்கு
குத்து குத்து கூர்வடி வேலால்
பற்று பற்று பகலவன் தணலெரி
தணலெரி தணலெரி தணலது வாக
விடுவிடு வேலை வெருண்டது வோடப்
புலியும் நரியும் புன்னரி நாயும்
எலியும் கரடியும் இனித்தொடர்ந்(து) ஓடத்
தேளும் பாம்பும் செய்யான் பூரான்
கடிவிட விஷங்கள் கடித்துய ராங்கம்
ஏறிய விஷங்கள் எளிதினில் இறங்க
ஒளிப்புஞ் சுளுக்கும் ஒருதலை நோயும்
வாதஞ் சயித்தியம் வலிப்புப் பித்தம்
சூலைசயாங் குன்மம் சொக்குச் சிரங்கு
குடைச்சல் சிலந்தி குடல்விப் பிரிதி
பக்கப் பிளவை படர்தொடை வாழை
கடுவன் படுவன் கைத்தாள் சிலந்தி
பற்குத்து அரணை பருஅரை யாப்பும்
எல்லாப் பிணியும் என்றனைக் கண்டால்
நில்லா தோட நீ எனக் கருள்வாய்
ஈரேழ் உலகமும் எனக்குற வாக
ஆணும் பெண்ணும் அனைவரும் எனக்கா
மண்ணாளரசரும் மகிழ்ந்துற வாகவும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உன்னைத் துதிக்க உன்திரு நாமம்
சரவண பவனே சையொளி பவனே
திரிபுர பவனே திகழொளி பவனே
பரிபுர பவனே பவமொளி பவனே
அரிதிரு மருகா அமரா பதியைக்
காத்துத் தேவர்கள் கடுஞ்சிறை விடுத்தாய்
கந்தா குகனே கதிர்வே லவனே
கார்த்திகை மைந்தா கடம்பா கடம்பனை
இடும்பனை யழித்த இனியவேல் முருகா
தணிகா சலனே சங்கரன் புதல்வா
கதிர்கா மத்துறை கதிர்வேல் முருகா
பழநிப் பதிவாழ் பாலகுமாரா
ஆவினன் குடிவாழ் அழகிய வேலா
செந்தின்மா மலையுறும் செங்கல்வ ராயா
சமரா புரிவாழ் சண்முகத் தரசே
காரார் குழலாள் கலைமகள் நன்றாய்
என்நா இருக்க யானுனைப் பாட
எனைத் தொடர்ந் திருக்கும் எந்தை முருகனைப்
பாடினேன் ஆடினேன் பரவச மாக
ஆடினேன் நாடினேன் ஆவினன் பூதியை
நேச முடன்யான் நெற்றியில் அணியப்
பாச வினைகள் பற்றது நீங்கி
உன்பதம் பெறவே உன்னரு ளாக
அன்புடன் இரட்ஷி அன்னமுஞ் சொன்னமும்
மெத்தமெத் தாக வேலா யுதனார்
சித்திபெற் றடியேன் சிறப்புடன் வாழ்க
வாழ்க வாழ்க மயிலோன் வாழ்க
வாழ்க வாழ்க வடிவேல் வாழ்க
வாழ்க வாழ்க மலைக்குரு வாழ்க
வாழ்க வாழ்க மலைக்குற மகளுடன்
வாழ்க வாழ்க வாரணத் துவசன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ்க வாழ்க என் வறுமைகள் நீங்க
எத்தனை குறைகள் எத்தனை பிழைகள்
எத்தனை யடியேன் எத்தனை செயினும்
பெற்றவன் நீகுரு பொறுப்ப துன்கடன்
பெற்றவள் குறமகள் பெற்றவ ளாமே
பிள்ளையென் றன்பாய்ப் பிரிய மளித்து
மைந்தனென் மீதுன் மனமகிழ்ந் தருளித்
தஞ்சமென் றடியார் தழைத்திட அருள்செய்
கந்தர் சஷ்டி கவசம் விரும்பிய
பாலன் தேவ ராயன் பகர்ந்ததைக்
காலையில் மாலையில் கருத்துடன் நாளும்
ஆசா ரத்துடன் அங்கந் துலக்கி
நேச முடனொரு நினைவது வாகிக்
கந்தர் சஷ்டி கவச மிதனைச்
சிந்தை கலங்காது தியானிப் பவர்கள்
ஒருநாள் முப்பத் தாறுருக் கொண்டு
ஓதியே செபித்து உகந்துநீ றணிய அட்டதிக்
குள்ளோர் அடங்கலும் வசமாய்த்
திசைமன்ன ரெண்பர் செயலது அருளுவர்
மாற்றல ரெல்லாம் வந்து வணங்குவர் நவகோள்
மகிழ்ந்து நன்மை யளித்திடும் நவமத
னெனவும் நல்லெழில் பெறுவர்
எந்த நாளும் ஈரெட்டாய் வாழ்வர்
கந்தர்கை வேலாம் கவசத் தடியைத்
வழியாய்க் காண மெய்யாய் விளங்கும்
விழியாற் காண வெருண்டிடும் பேய்கள்
பொல்லா தவரைப் பொடி பொடி யாக்கும்
நல்லோர் நினைவில் நடனம் புரியும்
சர்வ சத்ரு சங்கா ரத்தடி
அறிந்தென துள்ளம் அட்டலட் சுமிகளில்
வீரலட் சுமிக்கு விருந்துண வாகச் சூரபத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாவைத் துணித்ததை யதனால்
இருபத் தேழ்வர்க்கு உவந்தமு தளித்த
குருபரன் பழநிக் குன்றினி லிருக்கும்
சின்ன குழந்தை சேவடி போற்றி
எனைத்தடுத் தாட்கொள என்றன துள்ளம்
மேவிய வடிவுறும் வேலவா போற்றி
தேவர்கள் சேனா பதியே போற்றி
குறமகள் மனமகிழ் கோவே போற்றி
திறமிகு திவ்விய தேகா போற்றி
இடும்பா யுதனே இடும்பா போற்றி
கடம்பா போற்றி கந்தா போற்றி வெட்சி
புனையும் வேளே போற்றி
உயர்கிரி கனக சபைக்கோர் அரசே
மயில்நட மிடுவோய் மலரடி சரணம்
சரணம் சரணஞ் சரவண பவஓம்
சரணம் சரணம் சண்முகா சரணம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமரர் இராஜவரோதயம் சம்பந்தன் அவர்களின் வாழ்க்கை வளம்

திருக்கோணமலைக்கு என்றும் பலவகைகளிலும் ஒரு தனிச்சிறப்புண்டு அதனால்தான் வெளிநாட்டவர்கள் கூட இங்கு வந்து அதன் சிறப்பையும் இயற்கை செயற்கை வனப்பையும் கண்டு மகிழ்கின்றனர். ஆன்மீகமும் அறிவியலும் ஒருங்காய் இயற்கையிலேயே அமைந்த பூமி இது. இவை ஒவ்வொன்றையும் ஆய்வு செய்து பார்த்தால் உண்மை விளங்குவதுடன் பல புத்தாக்கங்களையும் அறிவியல் உலகிற்கு படைக்க முடியும்.

இத்தகைய மண்ணில் உயர் சைவ வேளான் குலோத்துங்க முதலியார் மரபில் வந்த கல்லோயா திட்டத்தின் (Superintendent of stores at Galoya project) களஞ்சியங்கள் அத்தியட்சகராக கடமையாற்றிய திரு.அருணாசலம் இராஜவரோதயம் பூரண சௌந்தர்ம் யோகாம்பிகைக்கும் அவர்களின் இரண்டாவது அருந்தவப் புதல்வனாக திருக்கோணமலை மண்ணில் ஆண்டு ஆயிரத்து தொழாயிரத்தி முப்பத்தி மூன்று ஆங்கில பெப்ரவரி மாதம் ஐந்தாம் திகதி அழகிய ஆண் குழந்தையை பெற்றனர். சைவஞானி திருஞானசம்பந்தரால் பாடல் பெற்ற தலமான படியால் பெற்றோர் இக்குழந்தைக்கு சம்பந்தன் என்று பெயர் வைத்து மகிழ்ந்தனர். மிகவும் செல்லமாக வளர்ந்த சம்பந்தன் "வாழும் பிள்ளையை மண் விளையாட்டில் தெரியும்" என்ற முதுமொழிக்கேற்ப கல்வியிலும் விளையாட்டிலும் கண்ணும் கருத்துமாயிருந்தார் இராஜவரோதயம் சம்பந்தன். தனது ஆரம்பக் கல்வியை திருக்கோணமலை புனித மரியாள் கல்லூரி, சென்யோசப் கல்லூரியிலும் கற்று உயர் கல்வியை யாழ் சென் பற்றிக் கல்லூரி, குருணாகல் சென் ஆன் கல்லூரி, மொறட்டுவ சென் செபஸ்ரியார் கல்லூரியிலும் கல்வி கற்று கொழும்பு சட்டக்கல்லூரியில் (Ceylon law college) சிறப்புச் சித்தி பெற்று 1954ஆம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆண்டு தனது 21வது வயதில் இலங்கையிலேயே அவ் ஆண்டிற்கான இளம் வயதுச் சட்டத்தரணியாக திருக்கோணமலைக்கு வந்த பொழுது புகையிரத நிலையத்தில் வரவேற்பளித்தனர் என முதியவர் ஒருவர் கூறினார். ஆங்கிலம், தமிழ், சிங்களம் ஆகிய மொழிகளில் பேசக்கூடிய ஆற்றல் கொண்டவர் ஆங்கிலத்தில் சிறப்பாக பேச எழுதக் கூடியவர், இதற்கு காரணமாய் அமைந்தது ஆங்கில பாதிரிமார்களே.

இளம் சட்டத்தரணியாக ஆரம்ப நாட்களில் அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் தலைவர் ஜீ.ஜீ. பொன்னம்பலம் கி.யூ.ஸி யிடம் சட்டப் பயிற்சி பெற்ற பொழுது திறமையான மாணவனாக அவரால் மதிக்கப்பெற்றார். ஆரம்ப நாட்களிலேயே வழக்குப் பேசுவதிலும் வாதாடுவதிலும் குறுக்கு விசாரணை (cross Examination) செய்வதிலும் தனது திறமையை காட்டினார்.

யாழ்ப்பாணம், கொழும்பு போன்ற இடங்களில் இருந்து வந்த சட்டத்தரணிகளுடன் தனது கட்சிக்காரர்களுக்காக நீதிமன்றில் வாதம் விவாதம் செய்து பல வழக்குகள் வெற்றி பெற்றுக் கொடுத்துள்ளார். இவருடன் கூடிப்பிறந்த சகோதரங்களான லக்ஷ்மிதேவி, சாரதாதேவி, நிர்மலாதேவி, விக்னேஸ்வரன், இராஜ மகேந்திரன், ராஜயோகினி என்போராவார். திருமண வயதில் தொழில்நுட்பவியலாளர் பி.கே உருத்ரா மணோன்மணி தம்பதிகளின் மூன்றாவது மகள் லீலாதேவியை மணம் முடித்து முறையே கிரிசாந்தினி, சுஞ்ஜீவன், செந்தூரன் என்போரை பெற்றனர்.

இவர்கள் எல்லோரும் உயர்கல்வி பெற்றவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது. பல தடவைகள் மந்திரிப் பதவிகள் சம்பந்தன் ஐயாவைத் தேடி வந்த பொழுது அவற்றை தூக்கி எறிந்து தமிழ்பேசும் மக்களின் உரிமைகள்தான் வேண்டும் மந்திரிப்பதவி முக்கியமில்லை என்று கூறியவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சம்பந்தன் ஐயாவின் தாய்மாமனான சு.சிவபாலன் வன்னியனார் என்றால் திருக்கோணமலை மாவட்டத்தில் தெரியாதவர்கள் கிடையாது. அந்தக் காலத்தில் கட்டுக்குளப் பற்று என்று அழைக்கப்படும் திரியாய் குச்சவெளி, நிலாவெளி , சாம்பல் தீவு போன்ற பகுதிகளில் வன்னியனாராக கடமையாற்றியவர். அப்பொழுது இளம் சட்டத்தரணியான சம்பந்தன் ஐயாவை அவர் கிராமங்களுக்கு கூட்டிச் சென்று எனது தங்கச்சியின் மகன் சட்டத்தரணியாக வந்துள்ளான் நீங்கள் உங்கள் வழக்குகள், உறுதிகள் போன்றவற்றை அவரிடம் செய்து பெற்றுக் கொள்ளலாம் என்று மக்களுக்கு அறிமுகப்படுத்தியவர்.

வாதுலன் என்ற ஒரே ஒரு பேரப்பிள்ளையும் பெறா மக்களாக சாங்கரியும், மருமக்களாக திருக்குமார், ராஜ்குமார், நாளாயினி, முகுந்தக்குமார், காமினி, சுபோதினி, மைதிலி, சிவதீசன், ராஜீவன், வசீகரன் என்போரும் மைத்துனர்களாக குமரகுரு, சிவராஜன், தியாகலிங்கம், சச்சிதானந்தம் , சந்திரா, சாரதாதேவியும் ஆகும். சட்டசபை (State Council) காலத்தில் இருந்து இன்று வரை தமிழனுக்குள் ஒற்றுமை என்ற ஒன்று இருந்ததில்லை. விட்டுக் கொடுப்பு, புரிந்துணர்வு, சகிப்புத்தன்மை என்பதும் இல்லை. பதவியை கொடுத்து எட்டப்பன் வேலை செய்பவர்களை வைத்து தமிழனை பேய்க்காட்டலாம் என்பது சிங்கள ஆட்சியாளர்கள் புரிந்து வைத்துள்ளார்கள். ஆயுதப்போராட்டம் என்பது கடைசி வழி, அதில் கூட ஒற்றுமையடையாதவர்கள் எப்படி தமிழ் மக்களின் உரிமைகளைப்பெற்றுக் கொடுக்கப் போகின்றார்கள். நாமோ சிறுபான்மை இனம் அதற்குள் பத்து கட்சிகள் பத்து தலைவர்கள், இது பேரினவாதிகளுக்கு தமிழினத்தை பிளவு படுத்த நாமே வழிகாட்டி கொடுக்கின்றோம். என்பதை சம்பந்தன் ஐயா புரிந்து செயல்பட்ட ஒரு தலைவன். ஆண்டு 1977ல் நடைபெற்ற பொதுத் தேர்தலில் தன்னை எதிர்த்துப் போட்டியிட்ட ஐக்கிய தேசியக்கட்சி வேட்பாளரை விட (15144, 51.76%) வாக்குகளால் வெற்றிபெற்றார். 1977ஆம் ஆண்டு , 1997ஆம் ஆண்டு, 2001ஆம் ஆண்டு, 2004 ஆம் ஆண்டு, 2010 ஆம் ஆண்டு,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2015 ஆம் ஆண்டு, 2020 ஆம் ஆண்டுகளில் இடம்பெற்ற ஏழு பாராளுமன்ற தேர்தல்களிலும் வெற்றி பெற்று திருக்கோணமலை மக்களின் பிரதிநிதியாக முப்பத்தி நான்கு ஆண்டுகள் கடமையாற்றி முடிசூடா மன்னனாக விளங்கினார் ஆனால் அவரது அரசியல் வாழ்க்கை நாற்பத்தி ஏழு வருடங்கள்.

அமரர் இரா. சம்பந்தன் ஐயா அவர்கள் சட்டத்தரணி தொழிலிலேயே ஏராளமாக உழைத்து வாழ முடியும். தமிழ் பேசும் மக்களின் உரிமை கருதி தந்தை செல்வாவின் அழைப்பை ஏற்றே அரசியலுக்குள் நுழைந்ததினால் சட்டத் தொழிலை முழுமையாக செய்யமுடியவில்லை. தமிழர் பிரச்சினை தொடர்பாக சர்வதேசத்திற்கு இலங்கை அரசு கொடுத்த வாக்குறுதிகளில் இருந்து தப்ப முடியாது என்பதை சம்பந்தன் ஐயா அடிக்கடி வலியுறுத்தி வந்துள்ளார்.

1963ஆம் ஆண்டு பாராளுமன்ற உறுப்பினராக விளங்கிய என்.ஆர்.இராஜவரோதயம் அவர்கள் இறந்த பொழுதும் 1970 ஆம் ஆண்டுத் தேர்தலிலும் அவரை இலங்கை தமிழரசுக் கட்சியினர் அழைத்தும் அவர் எம்.பி பதவிக்காக ஓடித்திரிந்தவரல்ல, தன்னை விட வயதில் மூத்தவர்களுக்கு இடமளித்து ஒதுங்கியவர், இவரது நெருங்கிய உறவினர்களான சிவபாலன் வனனியனாரும், என்.ஆர். இராஜவரோதயமும் திருகோணமலை பிரதிநிதிகளாக பாராளுமன்றத்தை பிரதிநிதித்துவப்படுத்தியவர்கள்.

1956ஆம் ஆண்டு ஆவணி மாதம் இலங்கை தமிழரசுக் கட்சியின் பாத யாத்திரையும், மாநாடும் தான் தமிழ் பேசும் மக்கள் மத்தியில் மட்டுமல்ல பண்டாரநாயக்காவின் அரசையே கதிகலங்கச் செய்து பண்டா - செல்வா ஒப்பந்தத்திற்கு வழி வகுத்தது.

1961 ஆம் ஆண்டு சத்தியாக்கிரகப்போராட்டத்தில் சம்பந்தன் ஐயாவின் பங்களிப்பு மறக்க முடியாத ஒன்றாகும். சிறையில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடைப்பட்ட இளைஞர்களை ஒரு சதம் கூட வாங்காமல் இலவசமாக வழக்குப் பேசி விடுவித்தார்.

2015ஆம் ஆண்டு அனைத்து தேசியத் தலைவர்களாலும் ஏற்றுக் கொள்ளப்பட்டு இரண்டாவது தமிழ் எதிர்க்கட்சித் தலைவர் என்ற பெருமையை பெற்றார். "நீங்களும் வாழுங்கள் எங்களையும் வாழ விடுங்கள்" என்ற தந்தை செல்வாவின் கூற்றுப்படி எல்லா இன மக்களின் உரிமைகளையும் மதித்து வாழ்ந்தவர். எல்லா மக்களும் உரிமை பெற்று வாழ வேண்டுமென்று விரும்பியவர். இந்நாட்டின் ஜனாதிபதியாக இருந்த ஜே.ஆர். ஜயவர்த்தன, ஆர்.பிரேமதாச, டி.பி. விஜயதுங்க, சந்திரிகா பண்டாரநாயக்க, மகிந்த ராஜபக்ஷ, மைத்திரி பால சிறிசேன இன்றைய ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க வரை இவர்மீது தனிமதிப்பும் மரியாதையும் வைத்துள்ளார்கள்.

சம்பந்தன் ஐயா அவர்கள் தனது காலத்திலாவது தமிழ் பேசும் மக்களின் உரிமைகளைப் பெற்றுக் கொடுக்க வேண்டும் என்ற நோக்கோடு செயல்பட்டார்.அது இயலாமல் போய்விட்டது. எந்த பேரினவாத அரசுகளும் தமிழ் மக்களின் உரிமைகளை வெள்ளித்தட்டில் வைத்து வளங்கப்போவதில்லை ஒன்று போராடிப்பெற வேண்டும் அல்லது இந்தியா உட்பட சர்வதேசத்தின் உதவியுடன் பெறப்படவேண்டும்.

காலத்திற்கு காலம் ஆட்சிக்கு வரும் அரசுகளுடன் இணைந்து அமைச்சர் பதவிகளை அலங்கரித்ததுடன் மட்டுமல்லாது அரச தூதுக்குழுக்களுடன் வெளிநாட்டு வைபவங்களில் கலந்து கொண்டு உண்மையான தமிழ் மக்களின் விடுதலைக்காக பாடுபடும் கட்சியை காட்டிக் கொடுத்ததுடன் மட்டுமல்லாது கிடைக்க இருக்கும் உரிமைகளைக் கூட கிடைக்காமல் செய்தவர்கள்தான் அன்றும் இன்றும் அரசுக்குப் பின்னால் நிற்பவர்கள் இப்படியானவர்களை எதிர்த்து பாராளுமன்றத்திலேயே "நீ வாயை மூடு" என்று கூட பகிரங்கமாக சொன்னவர் சம்பந்தன் ஐயா.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கை வாழ் தமிழ் மக்களின் பிரச்சினை பற்றி உலகத் தலைவர்களான இந்தியப் பிரதமர் இந்திரா காந்தி, ராஜீவ் காந்தி, வி.பி.சிங் குஜ்ரால், மன்மோகன் சிங், நரேந்திர மோடி, தென்னாபிரிக்காக ஜனாதிபதி நெல்சன் மண்டேலா மற்றும் நோர்வே வெளிநாட்டு மந்திரி, ஐக்கிய நாடுகள் சபையின் செயலாளர் நாயகமாக விளங்கியவர்களான கொபிஆனான், பான் கீன் மூன், பிரித்தானிய, கனேடிய, அமெரிக்க, நாட்டுத் தலைவர்கள், ராஜதந்திரிகள் கூட அவர் மீது மதிப்பும் மரியாதையும் வைத்துள்ளார். சம்பந்தன் ஐயா அவர்கள் பிரிக்க முடியாத, பிரிக்க கூடாத ஒன்று பட்ட ஐக்கிய இலங்கைக்குள் இணைந்த வடக்கு கிழக்கிற்கு தமிழ் பேசும் மக்களுக்கு அதிகாரங்களை சமஷ்டி அடிப்படையில் பரவலாக்கிக் கொடுக்கப்பட்ட வேண்டும் என்பதையே அவர் வலியுறுத்தி வருகின்றார்.

தமிழ் மக்களின் சமத்துவ உரிமைக்காக பாடுபட்டார் சம்பந்தன் ஐயா என்று கூறும் பாரதப்பிரதமர் நரேந்திர மோடியும் தமிழக முதல்வர் ஸ்ராலினும் உள்ளார்ந்த மனம் வைத்தால் இலங்கை வாழ் தமிழ் மக்களின் துயரை உடனடியாக துடைக்க முடியும். சர்வதேச மற்றும் வல்லரசுகள் கூட இந்தியா ஈழத்தமிழர் விவகாரத்தில் என்ன சொல்லுகின்றது என்றுதான் கேட்கின்றார்கள் என சம்பந்தன் ஐயா கூட பல தடவைகள் பகிரங்கமாக கூறியுள்ளார். ஆகவே பக்கத்து நாடான இந்தியா இதை இலகுவாக செய்ய முடியும், இவ்விடயத்தை கடுமையாக பிடித்தால் இலங்கை சீனா பக்கம் திரும்பிடுமோ என்ற பயம் இந்திய தேசிய பாதுகாப்புக்கு உண்டு.

இலங்கைத் தமிழரசுக் கட்சி என்பது இலங்கை வாழ் சகல தமிழ் பேசும் மக்களையும் இந்துக்கள், இஸ்லாமியர்கள், கிறிஸ்தவர்கள் என்றோ யாழ்ப்பாணத்தான், மட்டக்களப்பான் மலையகத்தான், கொழும்பான் என்று பிரித்துப் பார்க்காமல் அவர்களின் அடிப்படை உரிமைக்காக பல தியாகங்கள் செய்து உருவாக்கப்பட்ட கட்சி. அந்தக் கொள்கைக்காகத்தான் இரா. சம்பந்தன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஐயா இறுதி மூச்சுவரை பாடுபட்டார். பல ராஜதந்திர நடவடிக்கைகளையும் விட்டுக் கொடுப்புக்களையும் இறுக்கமான நடவடிக்கைகளையும் மேற் கொண்டார். ஒரு ஜனநாயக நாட்டில் மக்கள் பிரதிநிதி சொல்வதைச் செய்யவேண்டியது அரசின் கடமை ஆனால் இலங்கையில் அது அறவே கிடையாது.

தேசிய - சர்வதேசிய ரீதியில் அவர் எடுத்த நல்ல முயற்சிகளைப் புரிந்து கொள்ளக் கூடியவர்கள் இல்லாததினால்தான் மக்களின் உரிமை, பொருளாதாரப் பிரச்சினைகள் தேக்க நிலையில் இருப்பதற்கு முழுக் காரணமாகும். இன, மத வாதங்கள் தான் இந்நாட்டை சீரளித்தது.


கடந்த முப்பது வருடகால யுத்தத்தில் ஆட்சியினர் செலவளித்த பணம் போதும் பொருளாதார நெருக்கடியில் இருந்து மீட்சி பெற, இனப் பிரச்சினையை தீர்த்தால் சகல பிரச்சனைகளும் தீர்ந்துவிடும் என்பதே சம்பந்தன் ஐயாவின் கருத்து.

திருக்கோணமலை மாவட்டத்தில் ஓலைக் குடிசையாக இருந்த பாடசாலைகள், வழிபாட்டுத் தலங்கள், வீதிகள், வேலை வாய்ப்புக்கள், பல்வேறு உதவிகள் எல்லாம் தன்னால் இயன்ற அளவுக்குச் செய்துள்ளார். தமிழ் மக்கள் ஒன்றுபட்டாலும் பல கட்சிகள் பேரினவாத சக்திகளால் உருவாக்கப்பட்டு யார் பெரியவன் என்ற போட்டி நிலவும் போது சம்பந்தன் ஐயாவால் தான் என்ன செய்ய முடியும். தமிழினத்தின் தலைவிதி இது.

கடந்த முப்பது ஆறு இரண்டாயிரத்தி இருபத்தி நான்கு ஞாயிற்றுக்கிழமை இரவு ஒன்பது மணி பதினைந்து நிமிடமளவில் தமிழனத்தின் குரலாய் உழைத்த அந்த மாமாலை சலிந்தது. ஒற்றுமையே அந்த ஆத்மாவிற்கு நாம் செய்யும் கடமை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனைவியின் ஆறாத்துயர்

சிறு வயதில் இருந்தே சொந்த பாசத்தால் ஒருவரை ஒருவர் நன்றாக அறிந்தோம். கடவுளுடைய நியதியால் எங்களுடைய மண வாழ்க்கை 60 வருடமாகி விட்டது. எந்தக்குறையும் இல்லாமல் என்னை மிகவும் நன்றாகப் பார்த்தீர்கள். நீங்கள் சிறந்த வக்கீலாகி Courtற்கு போய் கஷ்டமான வழக்குகள் எல்லாவற்றையும் வெற்றி பெற்று வீட்டிற்கு வரும் வேளையில் பொறுப்பை என்னிடம் ஒப்படைத்து என்னுடைய விருப்பப்படியே வீட்டை நடத்த விட்டீர்கள். என்னுடைய தாய் தந்தையரையும், உங்களது தாய், தந்தையரைப் போல் பாசமாகவும், பல உதவிகளைச் செய்ததையும் நான் எப்பொழுதும் மறக்க மாட்டேன்.

மிகவும் பாசமான பக்குவமான பொறுப்புள்ள கணவனாகத் திகழ்ந்தீர்கள் என்னுடைய கால் நடக்க முடியாவிட்டாலும் எனக்குரிய மருந்துகள் வைத்தியம் எல்லாம் ஒழுங்காக நடக்கும். ஒவ்வொரு நாளும் எனக்கு விபூதி பூசமுன் குத்துவிளக்கிற்கு விபூதி பூசிவிட்டு எனக்கு பூச வருவீர்கள் என்று மகள் சொன்னாள். என்னுடைய வாழ்நாள் சுகம் உங்களுக்கு மிகவும் முக்கிமாக இருந்தது. உங்கள் சுகத்திற்காக நிறை குடத்திற்கு நான் விபூதி பூசவில்லையே அப்பா.என்னுடைய 3 செல்வங்களும் , மருமகளும் உங்களுடைய துயரத்தில் இருந்து சிறிதளவு விடுபட்டு மேலோங்கி வளர்ந்து வாழ்க்கையை சரியான பாதையில் கொண்டு செல்ல உங்களுடைய ஆசிகள், வாதுளன் நன்றாகப் படித்து பிற்காலத்தில் உங்களுடைய பெயரைக் காப்பாற்றுவான் என்ற நம்பிக்கை எனக்கு நிச்சயமாக உண்டு. பத்திரகாளி அம்பாளும், வில்லூன்றிக் கந்தனும் எப்பொழுதும் உங்களுடனேயே அப்பா

பிரிவால் துயருறும்
உங்கள் அன்பு மனைவி
லீலா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மகளின் மீளாத்துயர்

பிறந்த நாள் தொடக்கம் இன்று வரை நீங்களும், அம்மாவும் எந்தவித கஷ்டமும் தெரியாமல் வளர்த்தீங்களே. பிறந்தநாள், தீபாவளிக்கு புதுப்புடவை எடுக்க வேண்டும் என்று முன்கூட்டியே சொல்லுவீங்களே. எனக்கு விருப்பமானது, தேவையானது யாவற்றையும் நான் உங்களிடம் கேட்காமலே நீங்களே யோசித்து எந்தக் குறையும் இல்லாமல் செய்து தருவீங்களே!

I will look after you till I live, இறைவனிடத்தில் இருந்தாலும் நல்ல முடிவுகளை எடுத்து நான் சரியான வழியில் செல்ல உதவி செய்யுங்கோ அப்பா!

தந்தை செல்வாவின் வேண்டுகோளுக்கிணங்க இருதடவை அரசியலில் ஈடுபட சம்மதிக்காத நீங்கள் மூன்றாம் தடவை சிறுவயதில் கொழும்பில் படித்துக் கொண்டு இருந்த என்னையும் அழைத்துக் கொண்டு தந்தை செல்வாவின் கொழும்பு வீட்டில் வெளி விராந்தையில் என்னை உட்கார வைத்துவிட்டு உள்ளுக்கு சென்று சம்மதம் தெரிவித்து விட்டு வந்தது எனக்கு பிறகு தான் தெரிய வந்தது அப்பா.

நான் கலாக்ச்க்ஷேத்ரா - திருவான்மியூர் Chennaiயில் முதலாம் பிரிவில் (First Class) 1988 December 5 வருட Diploma Course முடித்து பட்டமளிப்புவிழா (Convocation) நடைபெற்ற பொழுது, அந்நிகழ்விற்கு உங்களுக்கு வர விருப்பம் இருந்த போதிலும், அதே சமயத்தில் Delhi தில்லியில் பிரதமமந்திரி ரஜீவ் காந்தியை கட்டாயம் சந்திக்க வேண்டிய சூழ்நிலையில் நீங்கள் Delhiக்கு போனது ஞாபகம் இருக்கா அப்பா. தமிழர்களின் பிரச்சனைக்கு நல்ல முடிவு காண்பதே உங்களுடைய விருப்பமும், கனவும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்னுடைய பிறந்தநாள் அன்று Election Meeting கடைசி நாள் யாழ்ப்பாணத்தில் நீங்கள் பேசவேண்டிய நிலையில் நான் சந்தோஷமாக வழி அனுப்பி வைத்ததையும் நீங்களும் முழு மனதுடனும் சென்றது ஞாபகம் இருக்கு அப்பா.

2009ம் ஆண்டு ஆவணி மாதம் சிவபதமடைந்த வீணை ஆசிரியர் என்னுடைய குரு ராஜேஸ்வரி பத்மநாபனின் முதலாவது ஆண்டு நினைவாஞ்சலி கலாக்ஷேத்ர கலைக்கூடத்தில் நடைபெற்று சிஷ்யர்களாகிய நாங்கள் வீணை வாசித்து குருவிற்கு சமர்ப்பணம் செய்த போது நிகழ்வு நிறைவேறிய பிறகு, நீங்களும் அம்மாவும் என்னிடம் வந்து You played very Well Mahal, you Played Confidently and Smoothly. நான் Court இல் வழக்கு பேசுறதைப் போல் வாசித்தனீங்க. Keep it up என கூறினீர்களே அப்பா

2010 ஆம் ஆண்டு December மாதம் Heart Surgery தில்லியில் செய்தநாள் தொடக்கம் ஆனி மாதம் 30ம் திகதி 2024ம் ஆண்டு இரவு 9.10 மணி வரையில் உங்களுடைய சுகத்திற்காக காலையில் இருந்து இரவு தூங்கும் மட்டும் முழுமையாக பக்கத்தில் நின்று பார்த்தது உங்களுக்கு மட்டுமல்லாமல் எல்லோருக்கும் நன்றாக விளங்கும்.புண்ணியம், அப்பாவுடைய Blessings எப்பொழுதும் இருக்கும் என்று சொல்வார்கள்.

சுகவீனம் சம்பந்தமாக என்னுடைய முடிவைத் தவிர வேறு யாருடைய சொல்லும் கேட்க மாட்டீர்களே அப்பா. நான் சரியான முடிவு எடுத்து உங்களைக் கவனமாகப் பார்ப்பேன் என்ற உங்களுடைய முழுமையான நம்பிக்கைக்கு நன்றி அப்பா.

பொங்கல், வருஷப் பிறப்பு, தீபாவளி நாட்களில் வில்லூன்றிக் கந்தன், பத்ரகாளி அம்பாள், மாணிக்கப்பிள்ளையார், மயூராபதி அம்மன், Slave Island முருகன் கோவில்களுக்கு தரிசிக்க போவதுடன், பெருநாட்கள் என்று கருத்தில் கொள்ளாது அந்நாட்களிலும் Meeting வைப்பீர்களே அப்பா.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இரவில் நடுச்சாமத்தில் 12.30 மணி அல்லது 1.30 அல்லது 2.30 மணிக்கு பாராளுமன்றத்தில் கதைப்பதை கை பெருவிரலையும், மற்ற விரல்களையும் சுட்டிக்காட்டி நித்திரையில் பெரிய சத்தமாக, தெளிவாக, விளக்கமாக கதைப்பீர்களே அப்பா. உங்களுடைய நெற்றியில் மட்டும் அரசியல் தான் வாழ்க்கை என்று தலைவிதி கூறுவது மட்டுமல்லாமல் உடல் இரத்தம் முழுக்க அரசியல் தான் ஓடுது அப்பா.

இந்திய வெளிவிவகார அமைச்சர் ஜெய்சங்கரை வியாழக்கிழமை சந்திப்பிற்கு முன் புதன்கிழமை இரவு நடுச்சாமம் நித்திரையில் வெளிவிவகார அமைச்சருடன் Meetimg நடத்தினீர்களே.

என்னுடைய பிறந்தநாள் November 13ம் திகதி, Nawaloka Hospital, 2023 November மாதம் Admit பண்ணியிருந்த போது 12ம் திகதி இரவு உங்களுடைய கருமங்கள் எல்லாம் முடித்து நீங்கள் தூங்கிக் கொண்டு இருக்கும் நிலையில் இரவு 11.23 மணிக்கு வீட்டுக்கு வந்தேன். 12.01 மணிக்கு என்னுடைய Cell phone சத்தம் கேட்க அப்பாவுக்கு முடியவில்லையோ என்று பயந்து Phone யை எடுத்தால் Wish you all the best mahal, Happy birthday, We'll go shoping one day 11.00 மணிக்கு பிறந்தநாள் சொல்லாமல் 12.00 மணிக்கு 13ம் திகதி பிறந்த பிறகு வாழ்த்தியதை மறக்கவே மாட்டேன் அப்பா.

365 நாட்களும் வீட்டுக்குள்ளேயே இருக்கும் என்னை ஒரு மணித்தியாலயம் நீங்கள் காணாவிட்டால் மகள் எங்கே, துவ கோ என்று Security, உதவி செய்பவர்கள் எல்லோரையும் வீடு முழுக்க சுற்ற வைப்பீர்களே அப்பா.

ஒவ்வொரு நாளும் இரவில் படுக்கமுன் மகள் என்று கூப்பிட்டு கையைப் பிடித்து முத்தம் தருவீங்களே அப்பா. நான் நீங்கள் உடம்பு நிலை காரணமாக ஓய்வெடுக்க வேண்டுமென்று Light யை நூற்றால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மகள் என்று கூப்பிட்டு Light யை தட்ட வைத்து முத்தம் தருவீர்களே அப்பா.

சாப்பிட்டீங்களா? இல்லை அப்பா, சாப்பிட்டு விட்டு வந்து படுங்கோ, Come and sleep soon என்று சொல்லுவீங்களே, சாப்பிட்டு வந்த பிறகு இருட்டில் எத்தனை மணி என்று கேட்பீங்களே, அடுத்த நாள் You slept very late yesterday, you must look after your self mahal, எல்லாம் என்மனதில் ஓடிக்கொண்டே இருக்குது அப்பா.

கடைசி 10 நாளும் மூன்று வேளையும் என் கையால் சாப்பாடு குழைத்து உங்களுக்கு ஊட்டியதையிட்டு மனதிற்கு ஆறுதலாயும், திருப்தியாகவும் இருக்குது அப்பா. 30ம் திகதி இரவு முருகனுடைய பாடல்கள் 2 மணித்தியாலம் கேட்டுவிட்டு சாப்பிடுவமா அப்பா? ஓம் மகள் சாப்பிடுவோம் என்று என் கையால் நன்றாக மென்று சாப்பிட்டீங்களே!

5-7 நிமிடம் கழித்து அப்பா! அப்பா! என்று எத்தனையோ முறை கூப்பிட்ட பொழுதும் பேச்சும் இல்லை, கண்ணும் மூடி இருந்தது. வில்லூன்றி முருகன் உங்களை கூப்பிடுகிறார் என்று நீங்கள் அறியாமலே முருகனுடன் போய் விட்டீர்கள். நம்ப முடியவில்லை ஏற்றுக்கொள்ளவும் முடியவில்லை. இரண்டு நாட்கள் நீங்கள் கண்முளிப்பீர்களா என்று எதிர்பார்த்தேன் ஆனால் அப்பா கண் முளிக்கமாட்டீர்கள் என்று ஒத்துக்கொள்ள வேண்டிய நிலை என்னுடைய அப்பாவுடைய மனதை, நேர்மையை தைரியத்தை யாராலும் நிரப்ப முடியாது.

உங்களை பற்றி சொல்லப்போனால் சொல்லி முடியாது அப்பா!

எப்பொழுதும் உங்களுடைய அறிவுறுத்தலையும்,

வழிநடத்தலையும் எதிர்பார்க்கும்

உங்களுடைய அன்பு மகள்

மகள்... மகள் ... மகள்...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அப்பா இனி எங்களுக்குள் இருந்தே வாழ்வார்
## (மூத்த மகன் திரு. ச. சஞ்ஜீவனின் துயரச்சுமை)

எங்கள் அப்பா எங்கள் குடும்பத்தின் மீது மிகுந்த அன்பும், அக்கறையும். உடையவராய் இருந்தார். சிறந்த குடும்பத் தலைவனாய் இருந்ததோடு, பிள்ளைகளான எங்களுக்கு அன்பானதும், கண்டிப்பானதுமான தந்தையாய் இருந்து எமக்கு வழிகாட்டினார். நான் பிறந்த அன்றிலிருந்து மருத்துவமனையை விட்டு வெளியேறும் வரையில் அம்மாவுடன் இருந்து அப்பாவே தூக்கமின்றி என்னை கவனித்தார். அந்த வகையில் எங்கள் அப்பா மிகவும் பொறுப்புள்ள தந்தையாராய் இருந்தார்.

முத்த மகனான நான் திருகோணமலையில் ஆரம்பக் கல்வியை பெற்றேன். பின்னர் எனது எதிர்காலத்துக்கு ஒளியேற்றும் முகமாக எனது அன்பு அப்பா என்னை கொழும்பு ரோயல் கல்லூரியில் சேர்த்தார். அங்கு கற்றுக் கொண்டிருக்கையில் 1977 மே மாதத்தில் ஒரு நாள் நான் கொழும்பிலிருந்து திருகோணமலைக்கு பிரயாணம் செய்து கொண்டிருந்தேன். அப்போது எனக்கு பன்னிரண்டு வயது. அம்முறை பொதுத்தேர்தலில் அப்பா போட்டியிடுவதற்காக நியமனப்பத்திரம் தாக்கல் செய்ய இருந்ததன் காரணமாகவே நான் திருகோணமலைக்கு வந்து கொண்டிருந்தேன். அன்றையதினம் திருகோணமலைக்கு தந்தை செல்வாவின் அஸ்தி ஊர்வலமாக கொண்டுவரப்பட்டிருந்தது.

ஊர்வலம் ஸ்ரீமாபுரத்தால் வந்து கொண்டிருந்த போது, சிங்களக் காடையர்கள் ஊர்வலத்தை மறித்து ஊர்வலம் வந்தோர் மீது தாக்குதல் நடத்தினர். எனினும், ஊர்வலத்தில் வந்தோர் எதிர்தாக்குதல் எதுவும் செய்யாது அஸ்தியை சேரிடத்திற்கு பக்குவமாய் எடுத்துச் சென்று சேர்த்தனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அப்பாவும் இந்த ஊர்வலத்தில் முன்னணிப் பிரமுகராக பங்குவகித்துக் கொண்டிருந்தார். கலவரத்தினூடே அஸ்தி சேரிடம் சேர்ந்தபோதும் திருகோணமலை நகர் பதற்றம் நிறைந்ததாகவே காணப்பட்டது. நான் பேரூந்தில் வந்துகொண்டிருந்த போதே திருகோணமலை மாவட்டத்தை சேர்ந்த சிங்கள ஊர்களில் எமது பேருந்து வழி மறிக்கப்பட்டு உள்ளிருந்த தமிழர்கள் தாக்கப்பட்டனர். தெய்வாதீனமாக என்னை எவரும் தாக்கவில்லை. நிலமையின் கடுமையை உணர்ந்து நான் நெல்சன் தியேட்டரடியிலேயே இறங்கிக் கொண்டேன். என் வரவை அறிந்திருந்த அப்பாவின் ஆதரவாளர்களான இளைஞர்கள் என்னை அவ்விடத்தில் இருந்து அழைத்துக் கொண்டு எங்கள் வீடுவரையும் வந்தனர்.

நாங்கள் எங்கள் வீட்டு வளவின் பிரதான வாயிலால் வரும்போது எங்கள் குடும்பத்தினர் அனைவரும் மிகுந்த பதற்றத்துடன் வீட்டுக்கு வெளியே நின்று என்னை எதிர்பார்த்துக் கொண்டிருந்ததைக் கண்ணுற்றேன். நான் வளவுக்குள் வந்ததும், அம்மா ஓடி வந்து என்னைக் கட்டி அனைத்து அழைத்துச் சென்றார். அப்பா எனக்கு உச்சி மோந்து முத்தம் கொடுத்து என் தோழில் தட்டிக் கொடுத்த போது அந்த வயதில் அவருடைய அரவணைப்பைப் பெற்றதில் உள்ளூர பெரிதும் மகிழ்ந்தேன்.

எனது அப்பா உறுதியானவராக இருந்ததனால் பதற்றத்தை வெளிக்காட்டி எங்கள் குடும்பத்தின் மற்றவர்களை பீதியடையச் செய்யாமல், எனக்கு எதுவும் நேர்ந்துவிடாது என அனைவரையும் உற்சாகப்படுத்திக் கொண்டிருந்ததை பின்னர் அறிந்தேன். அன்று போலவே அவர் என்றும் தனது துன்ப துயரங்களை தனக்குள்ளே வைத்துக் கொண்டு மற்றவர்களை சோர்வடையாது உற்சாகப்படுத்தும் ஒருவராகவே இருந்து வந்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அப்பா மிக இள வயதிலேயே வழக்கறிஞராகிவிட்டார். அவர் வழக்கறிஞராக திருகோணமலை நீதிமன்றத்தில் தொழில் புரிந்து கொண்டிருந்த போது மிகவும் பிரபல்யமான வழக்கறிஞராக விளங்கினார். நீதிமன்றத்திற்கு நேரகாலத்துடன் செல்லும் வழக்கறிஞராயும், நீதிமன்றத்தை விட்டு இறுதியாக வெளியேறும் வழக்கறிஞராய் இருந்தார் என்ற பெயரையும் அவர் பெற்றிருந்தார். 1977ல் நடைபெற்ற இனக்கலவரத்தைத் தொடர்ந்து தலைநகரில் எனது பாதுகாப்பான படிப்பும் கேள்விக்குறியானது. எனவே, அப்பா என்னையும், கொழும்பில் படித்துக் கொண்டிருந்த என் அக்காவையும் திருகோணமலைக்கு வருவித்து திருகோணமலையில் எங்கள் கல்வியைத் தொடர ஏற்பாடு செய்தார்.

1983 இனக்கலவரத்தின் போது எங்கள் வீடுகள் தாக்குதலுக்குள்ளாயின. எங்கள் எல்லோரினதும் பாதுகாப்பு கேள்விக்குறியானது. எனவே, அப்பா எங்கள் அனைவரையும் இந்தியாவுக்கு அனுப்பி வைத்தார். தான் இலங்கையில் இருந்து தமிழ் மக்களின் நலன்களைக் கவனித்து கொண்டிருந்தார்.

அப்பா திருகோணமலை மண்ணை மிகவும் நேசித்தார். இதன் காரணமாக எல்லைக் கிராமங்களிலே மக்களைக் குடியேறச் செய்து அவர்களுக்கு ஆவண செய்வதில் மிகவும் அக்கறை கொண்டிருந்தார். அப்பா திருகோணமலையைக் கோணேசர் பூமி என்றே குறிப்பிடுவார். அவர் தொடர்ந்து அவ்விதம் குறிப்பிடுவதால் இந்த மண்ணின் மீதான பற்றை எங்கள் மீது ஊட்டி வளர்த்துள்ளார்.

அப்பா தனது ஆதரவாளர்களின் சுகசேமங்களில் பெரிதும் அக்கறை கொண்டிருந்தார். எனினும், நீதிக்கும் மனிதஉரிமைகட்கும் மாறாக அப்பா என்றும் நடந்து கொள்ள மாட்டார். அவ்வித சந்தர்ப்பங்கள் நேரும் போதெல்லாம் ஆதரவாளர்களுக்கு அறிவூட்டி,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நெறிப்படுத்தி, ஆசுவாசப்படுத்தி அவர்களை அவர்கள் நியாயத்தை ஏற்கும்படி செய்வது அப்பாவின் வழிமுறையாகும். திருகோணமலைத் தொகுதியின் கிராமப்புற மக்களின் நலன்கள் மீது அப்பா மிகுந்த அக்கறை கொண்டிருந்தார். அடிக்கடி அப்பகுதி மக்களை அழைத்தும், அப்பகுதிகளுக்குச் சென்றும் ஆவன பல செய்து அவர்களின் மனங்களில் நீங்கா இடத்தைப் பிடித்துக் கொண்டார். இதன் வெளிப்பாடாக அப்பாவின் இறுதிச் சடங்கில் கலந்துகொண்ட அப்பகுதி தாய்க்குலத்தினர் ஒப்பாரியிட்டு அழுதரற்றி தங்கள் துக்கத்தை வெளியிட்டமை அவ்வேளை வந்திருந்த அனைவரையும் மனம் நெகிழ வைத்தது.

அப்பா ஆடம்பரத்தை வெளிப்படுத்தாத இறைபக்தியாளர். கோணேஸ்வரர், பத்திரகாளி அம்மன், வில்லூன்றிக் கந்தசுவாமி, ஆலடிப்பிள்ளையார் எல்லோரும் அப்பாவின் இஸ்ட தெய்வங்கள், இத் தெய்வங்களுக்கு அபிஷேகம் செய்து வழிபாடாற்றுவதில் அப்பாவுக்கு அளவற்ற பிரியம். வருடா வருடம் குறித்த தினங்களில் இதனைச் செய்வதில் அப்பா மிகக் கவனமாய் இருந்து வந்தார். திருக்கோணேஸ்வரர் ஆலயத்தையும், வில்லூன்றிக் கந்தனின் ஆலயத்தையும் ஆகம முறைப்படி புனரமைத்து குடமுழுக்குச் செய்வித்து காண வேண்டும் என்பது அப்பாவின் பெரு விருப்பு.

கோணேஸ்வரர் ஆலய விடயத்தில் இந்தியத் தூதரகத்தைத் தொடர்பு கொண்டு இதற்கான ஆரம்ப நடவடிக்கைகள் அனைத்தையும் முடித்திருந்தார். இவ்வாலயத்தை போத்துக்கீசர் வரும்போதிருந்த அந்த நிலையிலேயே மீண்டும் இருப்பது போல் இராஜகோபுரத்துடன் புனரமைக்க வேண்டும் என்பதே அப்பாவின் விருப்பாகும். எனினும், வேறு பல சிக்கல்களின் காரணமாக அவ்விடயம் ஒப்பேறவில்லை. இருப்பினும், இந்திய அரசு அந்த நடவடிக்கையை பூரணப்படுத்தும் என்று நம்புகின்றேன். இதேபோல் வில்லூன்றிக் கந்தனின் ஆலயம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொரடர்பான அப்பாவின் கனவை அவர் பலமுறை விபரித்தபடியே ஆலய திருப்பணிக் குழுவினர் நிறைவேற்றி வைப்பர் என நம்புகின்றேன்.

அப்பா, எல்லா விடயங்களிலும் ஒழுங்கு முறையைக் (dicipline) கடைப்பிடிப்பவர். எதை எடுத்தாலும் அதைச் சிறப்புறச் செய்ய வேண்டும் என்பதில் பெரும். அக்கறை உள்ளவர். இது அப்பாவின் இறுதிக் காலம் வரை அப்பாவோடையே இருந்தது, நிகழ்வுகளுக்கு நேர காலத்துடனேயே சென்று விடுவார். சந்திப்புகளுக்கு நேரம் ஒதுக்கினால் அந்த நேரம் தப்பாமல் அவற்றை மேற்கொள்வார். இராஜதந்திர சந்திப்புகளை சிறந்த முன்னாயத்தத்துடனேயே மேற்கொள்வார்.

அப்பா, எந்தெந்த மருந்துகளை எந்தெந்த நேரத்தில் எப்படி எப்படியெல்லாம் பயன்படுத்த வேண்டும், உணவை மருத்துவ ஆலோசனையின்படி எவ்விதம் மேற்கொள்ள வேண்டும், ஓய்வு, உடற்பயிற்சி என்பவற்றை எவ்வாறு கடைப்பிடிக்க வேண்டும் என்பவற்றிலெல்லாம் கண்ணும் கருத்துமாய் இருந்தார். நாங்களோ, உதவியாளர்களோ அவருக்கு அவற்றை நினைவூட்ட வேண்டிய அவசியம் எச்சந்தர்ப்பத்திலும் ஏற்படவில்லை.

நாட்டு, உலக, தொகுதி, கட்சி தொடர்பான விடயங்களில் எல்லாம் நிகழ்நிரலாக (update) இருப்பதில் அப்பா மிகவும் அக்கறை கொண்டவர். வாசிக்க முடிந்த காலங்களில் எல்லாம் செய்தித் தாள்களை அன்றன்றைக்கே மிக விரைவாக வாசித்து முடித்துவிடுவார். சந்திப்புக்களின் முன் உசாதுணைக்குத் (reference) தேவையான வற்றையெல்லாம் நேரகாலத்துடனேயே பார்த்து வைத்துவிடுவார். நேரம் தவறாது தொலைக்காட்சிச் செய்திகளை மும்மொழியிலும் கேட்டும். பார்த்தும் கிரகித்துக் கொள்வார். அவர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒன்றில் ஈடுபட்டிருக்கும்போது எவ்வித இடைஞ்சல்களையும் (disturbance) சகிக்கமாட்டார். இது எமக்கும்,அவரது கட்சிக்காரர்களுக்கும் நன்கு தெரியும்.

அப்பா இறுதிவரை படுக்கையில் விழவோ, பேச்சில் தடுமாறவோ இல்லை. எப்போதும் தெளிவாயும், நினைவாற்றல் உள்ளவராயுமே இருந்தார். ஜூன் 14ம் திகதி அப்பாவை நேர்காணல் செய்த வீரகேசரி செய்தி ஆசிரியர் ஆர்.ராம் அவர்கள் இச் சந்திப்பு தொடர்பாக அண்மையில் நேர்காணல் ஒன்றின் போது அப்பா இயற்கை எய்துவதற்கு பதினாறு நாட்களுக்கு முன்புகூட எவ்வளவு தெளிவுடன் இருந்தார் என்று வியந்ததை இதற்கு ஆதாரமாகக் குறிப்பிடலாம்.

அப்பாவுக்கு ஒரே ஒரு பேரப்பிள்ளை. அடிக்கடி தம்பியை அழைத்து தனது பேரப்பிள்ளையைக் கூட்டிவரச் செய்து அவனுடன் செல்லம் பொழிவதில் அப்பா பெருமகிழ்ச்சி அடைவது கண்டு நாங்கள் அனைவருமே இன்புறுவோம்.

இத்தனைக்கும் நிலைக்களனாய் இருந்த எங்கள் அப்பா இயற்கையின் அழைப்பை ஏற்றமை எங்கள் எல்லோருக்கும் பேரதிர்ச்சியே. நாங்கள் யாரும் அவ்வதிர்ச்சியில் இருந்து இன்னும் விடுபடவில்லை. அப்பாவுக்கு உதவி செய்த நேரங்கள் எல்லாம் இப்போதும் எங்கள் நினைவில் வந்து துக்கிக்கச் செய்கின்றன.

அவரது ஒவ்வொரு அசைவும் எனது கண்ணில் எப்போதும் நிழலாடிக் கொண்டிருக்கின்றது. அப்பாவின் குரல் அடிக்கடி எனக்குக் கேட்கிறது. இதனால் அடிக்கடி நித்திரையில் விழித்துக் கொள்கின்றேன். எத்தனை தான் நான் வளர்ந்தாலும், அப்பாவுக்கு உதவிகள் புரிந்த காலத்தில் எனக்கு அப்பாவோடு ஏற்பட்ட நெருக்கம் என்னை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அப்பாவோடு இறுகப் பிணைத்துவிட்டது. அவரவர் அனுபவித்தால் மட்டுமே அந்த உணர்வைப் புரிந்து கொள்ள முடியும். என்ன இருந்தாலும் எனது அப்பா என்னுடனேயே இருந்து, என்னை நெறிப்படுத்தி, ஆசிர்வதித்துக் கொண்டே இருக்கின்றார் என்ற தென்போடு அப்பாவின் 31ம் நாள் கிரியைகளுக்கான ஏற்பாடுகளைச் செய்துகொண்டிருக்கின்றோம். அப்பா இனி எங்களுக்குள் இருந்தே வாழ்வார்.

ஓம் சாந்தி.... சாந்தி.... சாந்தி...

## அன்புள்ள அப்பாவுக்கு

அப்பா, என்னை நீங்கள் "குட்டி" என்று செல்லமாக அழைப்பீர்கள். நீங்கள் என்னுடன் கதைக்கும் போது பல தடவைகள் விவாதம் ஏற்படுவது சாதாரணம். நான் சிறுவயதில் மிகவும் குழப்படியாக இருந்த போதிலும் ஒரு அப்பாவாக என்னை நெறிப்படுத்தி படிக்க வைத்தீர்கள். நான் சுகவீனமுற்ற போது ஒரு ஊன்றுகோல் போல் என்னுடன் இருந்து என்னை சுகப்படுத்தி விட்டீர்கள். கடந்த சில வருடங்களாக உங்களுக்கு கடமைகளை செய்ய கிடைத்ததை பாக்கியமாக கருதுகின்றேன். சில நாட்களுக்குப் பிறகு அந்த ஞாயிற்றுக்கிழமை மாலை நான் உங்கள் வீடு வந்த போது சில மணி நேரம் முருகப்பெருமானின் பாடல்களைக் கேட்டீர்கள். நான் வரும் வரையில் இறைவனடி செல்ல காத்திருந்தது போல எனக்கு இறுதியில் புலப்பட்டது.

இளைய மகன்
ரமேஷ் செந்தூரன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அன்புள்ள அப்பப்பாவுக்கு அப்புச்சியின் சமர்ப்பணம்

நான் உங்கள் வீடு வரும்போது எப்பொழுதும் உரத்த குரலில் என்னை அப்புச்சி என அழைத்து நெற்றியில் முத்தம் கொடுத்தீர்கள். நான் உங்களது ஒரே ஒரு செல்லப்பேரனாக இருந்தேன். உங்களுக்கு எப்போதும் விஷேசமாக அன்பளிப்பு கிடைத்தால் தவறாமல் எனக்கு அனுப்பும் படி கட்டளை இடுவீர்கள்.

எனது பெற்றோர் என்னை "குழப்படி" என முத்திரை குத்தினாலும் நீங்கள் அதை மறுத்து "நான் ஒரு சுறுசுறுப்பான பையன்" என கூறுவீர்கள். உங்கள் பக்கத்தில் என்னை அழைத்து "நீ நன்றாகப் படிக்க வேண்டும்" அம்மாவினதும் அப்பாவினதும் சொல் பேச்சு கேட்க வேண்டும்" என்று எப்போதும் அறிவுரை கூறுவீர்கள். நீங்கள் என்னை விட்டுப் பிரிந்ததை நான் மிகவும் உணர்கின்றேன்.

பேரன்
வாதுலன்

# அன்புள்ள மாமாவுக்கு

நீங்கள் எனக்கு ஒரு நல்ல மாமனாக இருந்து எனக்கும் எனது கணவனுக்கும் பல அறிவுரைகளை கூறினீர்கள். நாங்கள் பிரச்சனைகளை சந்திக்கும் போது அதனைத் தீர்ப்பதற்கு அறிவுரைகளைக் கூறி உறுதுணையாக இருந்தீர்கள். அதனால் எனக்கும் எனது கணவனுக்கும் தைரியத்தைக் கொடுத்தீர்கள். உங்கள் ஆத்மா சாந்தியடைய வில்லூண்டிக் கந்தன் துணை நிற்பானாக.

மருமகள்
மதிவதனி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தங்கை நிர்மலாவின் தாளாத் துயர்

அண்ணா என்று
அளவிலா
பாசம் வைத்தோம்
வாழ்வில் இருளை
அகற்றி
வாழவைத்த தெய்வமே
இனி எங்கே
காண்போம்

## தங்கை ராஜயோகினியின் உள்ள நெகிழ்வு

அப்பா இறந்த போது
பதினெட்டு வயது
அண்ணா! நீங்கள்
தானே எமை ஆளாக்கினீர்கள்
அப்பா இல்லா குறையை
போக்கினீர்கள்
கேட்டதெல்லாம் வாங்கி
தருவீர்களே!
படிப்பித்து விட்டு
திருமணமும் செய்து
வைத்ததை மறக்கலாமோ
இப்படி ஒரு அண்ணா
இனி கிடைப்பாரோ!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கண்ணில் நிறைந்தவைகளுள் சில....

தனக்கென ஒரு பாதையை தேர்ந்து
தான் செல்ல வேண்டிய தூரத்தை சேர்ந்து
தொழில் சார் துறையில் கொடி கட்டி பறந்து
தந்தை சொல் கேட்டு திருமண் காத்து...

உடல் தளர்ந்த நேரத்திலும் ஒற்றுமைக்கு வழி சமைத்து
உன்னத லட்சியத்தில் எள்ளளவேனும் விலகாது
ஊர் எரிந்த போதெல்லாம் ஒரு சொல்லால் அதை அணைத்து
உறவெனும் பந்தத்தை உன்னதமாக நினைத்து...

தவப்புதல்வ னாக வாழ்ந்த
"சம்பந்தன் என்ற சகாப்தம்"
தாங்குவார் தாங்க, தேம்புவார் தேம்ப
தன் உறவு நீத்து, உரிமை துறந்து
தபால் நிலைய வீதி வழியாக
தனக்கென குவிந்த மலர்களுள்
தானும் ஒரு மலராய்
புது இடம் புக்கிய
நாடே போற்றிய... "ஆளுமையை"
நாம் இனி காண்பது எப்பிறப்பில்...

அன்னாரின் ஆத்ம சாந்திக்காக பிரார்த்திக்கும்
கார்த்திகேசன் குடும்பத்தினர்,
திருக்கோணமலை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நெஞ்சு பொறுக்குதில்லையே மாமா

ஆல மரத்தின் விருட்சம்போல்
தன் குடும்பம் உட்பட
ஊருக்கெல்லாம் நிழல் தந்த அன்பின் இருப்பிடமே
மருமக்கள் நாங்கள் வாடிவதங்குகின்றோம் மாமா
அப்பாவிற்கு அப்பாவாய் அறிவுரைகள் பல கூறி
தப்பாமல் வழி நடத்திய மாமா

தஞ்சமென வந்தவர்க்கு தாராளமாய் உதவி
தரணிபோற்ற வாழ்ந்தீரே மாமா

திரு, ராஜன், நளாயினி, முகுந்தன், காமினி,
சுபி, மைதிலி, பாபு, ராஜீவன், சங்கரி, வசி

## ஆறுதல்

நிரந்தர மென்று எதையும் நீ அங்கலாய்க்காதே
உரியவையெல்லாம் உருமாறும் ஒரு நாள்
சம்பந்தன் ஐயாவும் சகசமாய் வேறு பொருளானார்
எம் எல்லோருக்கும் இதே முடிவு என ஆறுதலடை

சுபம்

ஆக்கம் : கலாபூஷன்
மகேந்திரன் என்.ஆர்
37, ஔவையார் வீதி, திருக்கோணமலை
தொ.பே : 026 2221536



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## OUR FOREVER KING SAM FROM YOUR LOVING GRANDCHILDREN

None of us had the privilege of seeing Ammapa but we never felt that void as we had you.

You always cared about our endeavors and asked about our future plans whenever you saw us.

To the outside world you were seen as a politician, but to our family you were the king whom we are proud to call Paata.

Coming to Sri Lanka won't be the same anymore, your cheeky smile will be immensely missed.

The memories we shared will be treasured, but paata time has now come for you to rest. Thank you for everything you have done for our parents and we will forever be grateful.

Always loved, never forgotten and greatly missed.

**Prasanna, Vyshie, praveena, Navenen, Vibushan, Prathap, Niroshun, Nithla, Mathuri, Branavan, Bhairavi, Saravanaa, Raaghavi, Aieshwarie, Sahaana, Abarna, Ramya, Sandhya, Bhavana, Vidhya & Aarna**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## கடவுள் தன்மையை விளக்கும் சிவனின் திருநடனத் தோற்றம்

பிரபஞ்சம் (UNIVERSAL) இயக்க இயங்கா நிலைக்கு மூலகாரணாய் விளங்கும் அந்தப்பரம் பொருளுக்கு உரிய சக்தியாக விளங்குபவன் சிவனின் திருநடனத் தோற்றமே. உலகில் கடவுள் ஒன்றே இரண்டாவதற்கு இடமில்லை என்று முதன் முதலில் கூறிய சமயம் சைவம் ஒன்றே சைவமும் தமிழும் பின்னிப் பிணைந்தது என்றாலும் சிவனின் திரு நடனத்தோற்றத்தை சகல உலகங்களிலும் உள்ள ஆன்மாக்கள் வழிபட்டு இம்மையிலும் மறுமையிலும் உய்வடையலாம். சிவனுக்கு மேலான கடவுள் எதுவுமேயில்லை அவனைத்தான் பல சமயங்களும் தங்கள் சமயங்களுக்கு ஏற்ற முறையில் பல பெயர்கள் சொல்லி அழைத்து வழிபடுகின்றனர். சிவனை உள்ளம் உருகி ஒரு நிலைப்பட்டு வழிபட்டாலே போதும் உலகில் முதன் முதலில் தோன்றிய சமயம் சைவம், அதனால் அது ஏனைய சமயங்களையும் அரவணைத்துச் செல்லும் தன்மை கொண்டது.

"தென்னாடுடையே சிவனே போற்றி
என் நாட்டவர்க்கும் இறைவா போற்றி"
இது ஒன்றே போதும் அதன் வியாபகத் தன்மைக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றி நவிலல்

கடந்த 30.06.2024 ஞாயிற்றுக்கிழமை இரவு 9 மணி 15 நிமிட இடைக்குள் எமையெல்லாம் ஆறாத் துயரத்திற்கு விட்டுச் சென்ற தமிழ்பேசும் மக்களின் பெரும் தலைவரும் எம் குடும்பத்தலைவனுமாகிய அமரர். இராஜவரோதயம் சம்பந்தன் ஐயாவின் மறைவுச் செய்தி கேட்டு விரைந்து வந்து மருத்துவமனை, மலர்சாலை போன்ற இடங்களில் உதவிகள், ஒத்தாசைகள் புரிந்தவர்கள், புகழுடலை பாராளுமன்றத்தில் வைத்து அஞ்சலிக்கு உதவிய சபாநாயகர் மற்றும் பாராளுமன்ற நிர்வாகத்தினர், அவ்விதமே யாழ்ப்பாணத்துக்கு கொண்டு செல்லவும், மக்கள் அஞ்சலிக்கும் ஏற்பாடுகள் செய்த அன்பர்கள், அச்சமயம் நாங்கள் திருக்கோணமலையில் இல்லாதிருந்த போதும் வீடு வளவைத் துப்பரவு செய்து இறுதிக்கிரியைக்கும், அஞ்சலி நிகழ்வுக்கும் ஏற்றவாறான ஒழுங்குகளைச் செய்த அன்பர்கள் இந்நிகழ்வுகளுக்கு ஒத்துழைப்பு வழங்கிய கிழக்கு மாகாண கௌரவ ஆளுநர் அவர்கள், இறுதி நிகழ்வுகளில் வடக்கு, கிழக்கு மற்றும் கொழும்பில் இருந்து வந்து கலந்து கொண்ட கட்சித்தலைவர்கள், தொண்டர்கள், ஏனைய பிரமுகர்கள், இலங்கைக்கு வெளியேயும் இருந்து வந்து இறுதிச் சடங்கில் கலந்து கொண்ட தலைவர்கள், அரச உத்தியோகத்தர்கள், வெளிநாட்டு ராஜதந்திரிகள், பொதுமக்கள், மலர் வளையங்கள், பதாதைகள் வைத்த பலருக்கும், தனியார் நிறுவனங்களுக்கும் மற்றும் ஜூன் 30 தொடக்கம் ஜூலை 08 வரையுமான நாட்களில் செய்து முடிக்கப்பட்ட அத்தனை செயற்பாடுகளுக்கும் உதவி, ஒத்தாசை, ஆலோசனை என்பன வழங்கியதோடு அந்தியேட்டிக கிரியையிலும் மற்றெல்லா வழிகளிலும் ஒத்துழைத்து எமக்கு ஆறுதலும் தேறுதலும் வழங்கிய நல்லுள்ளங்கொண்ட அனைவருக்கும் எமது உளப்பூர்வமான நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

குடும்பத்தினர்

தபால் கந்தோர் வீதி,
திருக்கோணமலை
30.07.2024



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# குடும்ப வி

அமரர் அருணாசலம் இராஜவரோதயம் — அமரர் பூரண சௌந்தரம் யோகாம்பிகை

- அமரர் இலக்சுமி தேவி + அமரர் குமரகுரு
  - திருக்குமார்
  - இராஜ்குமார்
  - நளாயினி
  - முகுந்தக்குமார்
  - காமினி
  - சுபோதினி
- **அமரர் சம்பந்தன்** + லீலாவதி
  - கிரிஷாந்தினி
  - சஞ்ஜீவன்
- அமரர் சாரதா தேவி + அமரர் சிவராஜன்
  - மைதிலி
  - சிவதீசன்
- நிர்மலாதேவி + அமரர் தியாகலிங்கம்
  - ராஜீவன்
- அமரர் விக்கினேஸ்வரன் + சந்திரா
  - பராசக்தி சாங்கரி
- அமரர் மகேந்திரன் + அமரர் சாரதாதேவி
- இராஜ… + … சச்சித…
  - வசீ…

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விருட்சம்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "உன்னையே நீ அறிவாய்"

என்னதான் படித்திருந்தாலும்
எத்தனை புத்தாக்கங்கள் படைத்திருந்தாலும்
"உன்னையே நீ அறிந்து" வாழ்ந்தால்
உண்மையான மனிதனாக வாழலாம்

மற்றவனைப் பார்த்து நீ வாழாதே
மனநிறைவோடு வாழ கற்றுக்கொள்
உனக்கென தனித்துவத்தை பேணு
உன்னை அதுவே உயர்த்தும்

நிரந்தர மென்று எதுவுமில்லை
நீ ஏன் இதற்காக அலைகின்றாய்
நல்லதைச் செய் நலமாய் வாழ்வாய்
நேர்மை உள்ளவன் பயப்படான்

புவியில் ஆறறிவுள்ள மனிதன்
பெருமையாய் ஏழாம் அறிவுபற்றி
சிந்திக்க முற்பட்டால் நடப்பதென்னை
சீர்தூக்கி "உன்னையே நீ அறிவாய்"

பிரபஞ்ச ஞானியின் குரல்



(சாக்ரடீஸ்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org